1989 ஏப்ரல் 22] *(திரு. ச. தங்கவேலு)*

இதற்கு நல்லதொரு முடிவை எடுப்போம் என்பதையும் மாண்பு மிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி திருச்சியில் வாழ்கிற குடிசைவாழ் மக்கள் பற்றியது தான் என்றாலும், சென்னை நகரில் வாழ்கிற குடிசைவாழ் மக்களின் நன்மை கருதி கேட்கப்படுகிற இந்தத் துணைக் கேள்விக்குத் தாங்கள் அனுமதி தர வேண்டுகிறேன். குடிசைமாற்று வாரியம் மூலமாக, குடிசைகளை அகற்றி மாடி வீடு கட்டித் தருகிற திட்டம் தி.மு.க. ஆட்சியின்போது கழகத் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை யிலே கொண்டுவரப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இத்திட்டம் திருச்சிக்கு இல்லை என்றார்கள். ஆனால் சென்னை நகரைப் பொறுத்தவரையில் ஏராளமான குடிசைகள் இங்கே இருக்கின்றன. அங்கே ஏழை எளிய ஆதிதிராவிட மக்கள் நிறைய இருக்கிறார்கள். அங்கெல்லாம் சுகாதாரக் குறைகள் நிறையவே இருக்கின்றன. மாடிவீடு கட்டித்தருகிற திட்டம் குறிப்பாகத் தற்போது திருச்சி நகருக்கு இல்லையென்றாலும், சென்னை நகரத்தில் இதற்கான முயற்சிகள் ஏற்கெனவே எடுக் கப்பட்டிருக்கின்றன. ஆகவே, குடிசை மாற்று வாரியம் மூலமாக மாடிவீடுகளைக் கட்டித் தருகிற திட்டத்தை முதன் முதலாக சென்னை நகரத்திற்கு முன்னுரிமையாகவே எடுத்துக் கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, குடிசைகளில் வாழ்கிற மக்களை, குடிசைகளை அப்புறப்படுத்திவிட்டு அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றிவிடுகிறார்கள். அவர்கள் தொழில் செய்கிற இடம் வேறாக இருக்கிறது. எனவே அவர்கள் குடிசை களையும் இழந்து, வேலையையும் இழந்துவிடுகிற நிலை இருக் கிறது. இதில் அரசு தலையிட்டு பாதுகாப்பு அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி 10 ஆண்டுகளாகக் குடிசைகளில் இருந்தவர்களை அகற்றுவது சட்ட விரோதம் என்று இருக்கிறது. எனவே இது சம்பந்தமாக அரசின் கருத்து என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலில் திருச்சி நகருக்குத்தான் மாடிவீடு கட்டுகிற திட்டமில்லை என்று சொன்னேன். சென்னையில் மாடிவீடு கட்டுகிற திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. அந்தப் பணி பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

உசிலம்பட்டி தாலுக்காவில் நூற்பாலை.

110-- (வினா எண். 739).* **திரு. பி. என். வல்லரசு:** மாண்பு மிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தாலுக்காவில், புத்தூர் மலைக்குப் பக்கத்தில் நூற்பாலை நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன. அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். (குறுக்கீடுகள்)

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருநதால் அவ்வுரைஉறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. தகவல் கோரல்

(அ) கர்நாடக மாநில அரசை மத்திய அரசு கலைத்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகுதான் பாயின்ட் ஆப் ஆர்டர் எல்லாம். எல்லோரும் உட்காருங்கள். ஒவ்வொருவராகப் பேசலாம். முதலில் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் அதிகாலையில் பத்திரிகையைப் புரட்டிய உடனே, நாட்டிலே எதற்காக பேச்சுரிமை, ஓட்டுரிமை, எழுத்துரிமை எல்லாம் கொடுத்தார்களோ அதெல்லாம் படுகொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்டுவிட்டது. இதன் காரணமாக . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு செய்தி இருநதால் பேசலாம். (குறுக்கீடு).

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அதன் காரணமாக கர்நாடக அரசு, . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மத்திய அரசு தொடர்பான செய்தி. வேறு செய்தி இருந்தால் பேசலாம். அடுத்து திரு. பொன். விஜயராகவன்.